# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.
## C.C. No. 76/2024 DW.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சரவணன் | க-பெ/<br>த–பெ | கிருஷ்ணன் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம் | |
| வயது: | : | 53/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஆசிரியர். | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.07.2026**

--------------------------------------------------------------------------------------------------------

**20.07.2026**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1) நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் இராமநாதன் செட்டியார் அரசு பள்ளியில் ஆசிரியராக பணி செய்து வருகிறேன். எந்த வங்கியில் கணக்கு உள்ளது என்றால் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா மற்றும் ICICI வங்கிகளில் கணக்கு உள்ளது. ம.சா.ஆ.1 வழக்கு காசோலை எனது ICICI வங்கி காசோலை என்றால் சரிதான். ம.ச.ஆ.1 காசோலையில் உள்ள கையொப்பம் எனது என்றால் இல்லை. எனது நண்பர் பாலசுப்பிரமணியன் எந்த ஊர் என்றால் காரைக்குடி. அவர் முகவரி என்ன என்றால் பொன்நகரில் உள்ளார், அவர் என்ன வேலை செய்கிறார்எ ன்றால் பணம் கொடுக்கல் வாங்கல் தொழில் செய்கிறார். பாலசுப்பிரமணியனிடம் எந்த தேதியில் கடன் பெற்றேன் என்றால் 30.11.2023. எவ்வளவு தொகை என்றால் ரூ. 50,000/–. பணம் பெற்றதற்கு அவரிடம் ஆவணம் எதாவது கொடுத்தேனா என்றால் எனது ம.சா.ஆ.1 ICICI வங்கி காசோலை கொடுத்தேன். காசோலை கொடுக்கும்போது பூர்த்தி செய்து கொடுத்தேனா என்றால் இல்லை.

2) தற்போதைய வழக்கு தாக்கல் செய்த பின்னர் காசோலை பற்றி தெரியவந்ததா

என்றால் தெரியவந்தது. பாலசுப்பிரமணியத்திடம் இது பற்றி கேட்டேன். அதற்கு பாலசுப்பிரமணியமும், புகார்தாரரும் சேர்ந்து தொழில் செய்து வருவதாகவும் காசோலையை பெற்று தருவதாக கூறினார். நான் பணம் பெற்றதிலிருந்து 6 வது மாதத்தில் பணத்தை திருப்பி செலுத்திவிட்டேன், அப்போதிலிருந்து காசோலையை என்னிடம் திருப்பி கொடுப்பதாக கூறினார். எந்த தேதியில் பணத்தை திருப்பி செலுத்தினேன் என்றால் தேதி நினைவில்லை. காசோலை திருப்பி தரவில்லை என்பதற்கு அவர் மீது நடவடிக்கை ஏதாவது எடுத்தேனா என்றால் இல்லை. நேரடியாக பல முறை கேட்டு வந்தேன். பாலசுப்பிரமணியத்தை வழக்கில் எனது தரப்பு சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். பாலசுப்பிரமணியன் ராஜ்குமாரிடம் எனது காசோலையை கொடுத்திருப்பதாக கூறியிருக்கும்போது அதற்கு ராஜ்குமாருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. தற்போது வரை பாலசுப்பிரமணியன் அல்லது புகார்தாரர் ராஜ்குமார் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததில்லை என்றால் கொடுத்ததில்லை. நான் புகார்தாரரிடம் நேரடியாக காசோலை கொடுத்து பணம் பெற்றேன் என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

3) வழக்கு காசோலை ம.சா.ஆ.1ல் உள்ள எனது கையொப்பத்தை கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.07.20 17:37:44 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
காரைக்குடி.